(2025-26-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

**SUBJECT CODE** | **25 UTL 101**

**REG.NO:**

# என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) :: பொள்ளாச்சி

## பருவ இறுதித் தேர்வுகள் : நவம்பர் – 2025

இளநிலை பட்ட வகுப்புகள் — மதிப்பெண்கள் : 75

அரசு உதவி (கணிப்பொறியியல்/வணிகவியல் நீங்கலாக ) மற்றும்

சுயநிதி (பி.ஏ.தமிழ் இலக்கியம் மட்டும்)

முதல் பருவம் — நேரம் : 3 மணி

## பகுதி – 1

## தமிழ்த்தாள் - 1

### பகுதி – அ (10x1=10 மதிப்பெண்கள் )

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத்** தேர்ந்தெடுத்து எழுதுக. (K1)

1. ஓதலினும் மிகச் சிறந்தது …………..
   அ) ஒழுக்கம் ஆ) பொறுமை இ) மானம் ஈ) உணவு

2. அரண்மனைத் திராட்சைகள் யாருடைய படைப்பு?
   அ) இராமலிங்கம் பிள்ளை ஆ) பெ. சிதம்பரநாதன் இ) காசிஆனந்தன் ஈ)சேதுபதி

3. பூதப்பாண்டியனின் மனைவி யார்?
   அ) வெள்ளிவீதியார் ஆ) ஆதிமந்தியார் இ) பொன்முடியார் ஈ) பெருங்கோப்பெண்டு

4. சால,தவ எனும் சொற்கள்……………
   அ) உரிச்சொல் ஆ) பண்புத்தொகை இ) வினையெச்சம் ஈ) முற்றியலுகரம்

5. நா. காமராசனின் படைப்பு எது?
   அ) நத்தைக் கூடுகள் ஆ) ஆகாயத்திற்கு அடுத்த வீடு
   இ) கறுப்புமலர்கள் ஈ) இன்னொரு மனிதன்

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க. (K2)**

6. தவம் கவிதையின் விழுமியம் யாது?
7. ஐஞ்சிறு காப்பியம் என்ற தொடரை முதலில் பயன்படுத்தியவர் யார்?
8. உதயணன் எந்த இசைக்கருவியை வாசிப்பதில் வல்லவன்?
9. விளைபயிர் என்பதன் இலக்கணக் குறிப்பு யாது?
10. பல்லவர் காலத் தமிழ் உரைநடையை எவ்வாறு இனங் காணலாம்?

### பகுதி – ஆ (5 x 5 = 25)

கீழ்க்காணும் வினாக்களுக்கு ஆய்தல்திறன் அடிப்படையில் (**K3-Analysis**) இரண்டு பக்க அளவில் விடையளிக்கவும். **(K3)**

11. அ) கோயம்புத்தூர் பற்றிய கவிஞர் கண்ணதாசனின் கருத்துகளை எழுதுக.
    (அல்லது)
    ஆ) பறவையின் குரலாகச் சக்திஜோதி வெளிப்படுத்தும் ஆதங்கங்களை விளக்குக.

(த.பி.பா)

*ETHICAL PAPER*

12. அ) கல்வியின் அவசியத்தை உணர்த்தும் அறக்கருத்துகளைக் குறிப்பிடுக.

(அல்லது)

ஆ) இயகோகா சுப்ரமணியம் பயணம் நல்கும் அனுபவங்களை எங்ஙனம் வெளிப்படுத்துகிறார்?.

13. இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

அ. "என்று பிறந்தவளென்றுணராத
இயல்பின ளாமெங்கள் தாய்"

(அல்லது)

ஆ) "சட்டை மேலே சட்டை போட்டு
சரிகை சட்டை மேலே போட்டு
போராக எங்க மச்சான்"

14. அ) சுட்டு,வினாப்பெயரில் வல்லினம் மிகுதலைச் சான்றுடன் தருக.

(அல்லது)

ஆ) வல்லினம் மிகாத இடங்களைத் தக்க சான்றுடன் கூறுக.

15. அ) எவையேனும் இரண்டு இலக்கண நூல்களின் நூலமைப்பை வியந்தெழுதுக.

(அல்லது)

ஆ) தமிழ்ச் சிறுகதை அமைய வேண்டிய முறையை எழுதுக.

பகுதி – இ **(5 x 8 = 40)**

கீழ்க்காணும் வினாக்களுக்கு ஆய்தல்திறன் அடிப்படையில்(**K4-Analysis**) நான்கு பக்க அளவில் விடையளிக்கவும். **(K4 (Or) K5)**

16. அ) மாணவனுக்கு நாமக்கல் கவிஞர் விடுக்கும் நல்நெறிகளை ஆய்க.

(அல்லது)

ஆ) வெள்ளைத்தேனாய்ச் சுவைக்கும் மலர்மகன் கவிதைகளைத் திறனாய்க.

17. அ) கவிஞர் சேதுபதியின் மொழிநடையையும், கவிதையின் நுட்பத்தையும் வெளிக்கொணர்க.

(அல்லது)

ஆ) சங்கப் பெண்பாற் புலவர்களின் சான்றாண்மையைப் பறை சாற்றுக.

18. அ) கொங்கு நாட்டுப்புற மக்களின் மானிடவியல் சார்ந்த பண்பாடுகளைக் கட்டுரையாக்குக.

(அல்லது)

ஆ). கோவை இலக்கியங்களில் சிறந்ததானஅம்பிகாபதிக் கோவையில் அகப்பொருள் மரபுகள் அமைந்த திறத்தை வெளியிடுக.

19. அ. வாழ்வின் தேவைகளை அடைவது குறித்த எஸ். இராமகிருஷ்ணனின் படைப்பை ஆய்க.

(அல்லது)

ஆ) காப்பான் சிறுகதை யானைகளின் துயர வாழ்வை எங்ஙனம் சித்திரிக்கின்றது?

20. அ) முதுமைப்பாரம் எனும் பொருண்மை குறித்துச் சிறுகதை எழுதுக.

(அல்லது)

ஆ) வானமே எல்லை எனும் தலைப்பில் கவிதை எழுதுக.



***********